# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1771/23 - 2012 අගෝස්තු 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.16

*1771/23 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

*2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டம்*

*2012 ம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் தொடர்பான பந்திகளுடன் வாசிக்க வேண்டிய 21 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் கௌரவ சுகாதார உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி மற்றும் மகளிர் விவகாரம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அத்துடன் சபை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமைச்சர் அங்கசே ஜகத் திலகசிறி பெரேரா ஆகிய என்னால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் இத்தால் விதிக்கப்படுகின்றன. இவ்விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாட் தொடக்கம் வலிதுடையனவாக இருத்தல் வேண்டும்.*

*அங்கசே ஜகத் திலகசிறி பெரேரா,*
*சுகாதார உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி*
*மற்றும் மகளிர் விவகாரம்,*
*நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு*
*அத்துடன் சபை நடவடிக்கைகள்*
*அமைச்சர்.*

*சுகாதார உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி*
*மற்றும், மகளிர் விவகாரம்,*
*நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அத்துடன் சபை நடவடிக்கை அமைச்சு.*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7,*
*2012, ஓகத்து 14.*

**விதிகள்**

*1. இவ்விதிகள் 2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மக்கள் சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் விதிகள் எனப்படும்.*

*2. இந்நியதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் இந் நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கப்படுவதுடன் உரிய அதிகாரியின் நிர்வாகத்துக்கும் மேற்பார்வைக்கும் கீழ் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களையும் விடயங்களையும் நிறைவேற்றுதல் வேண்டும் :-*

(அ) மேல் மாகாண சுகாதார திணைக்களத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை பிரதேசச் சுகாதார சேவை பணிப்பாளர்கள் ;

(ஆ) சுகாதார வைத்திய அலுவலர்கள் ;

(இ) மாநகர சபையொன்றில் கடமையில் ஈடுபட்டுள்ள பிரதான சுகாதார வைத்திய அலுவலர்கள், மேலதிக சுகாதார வைத்திய அலுவலர்கள் மற்றும் ஏனைய எல்லா சுகாதார வைத்திய அலுவலர்கள் ;

(ஈ) மாகாண நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் ;

(உ) மாவட்ட நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் ;

(ஊ) சுகாதார வைத்திய அலுவலர் அலுவலகங்களில் உள்ள நிர்வாக பொது சுகாதார பரிசோதகர்கள் ;

(எ) மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ;

(ஏ) மேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதான பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பொது சுகாதார பரிசோதகர்கள்.

3. (1) இந்நியதிச் சட்டத்தின் 15ஆ ம் பிரிவுக்கேற்ப ஏதும் வளவு ஒன்றுக்கு உட்சென்று மக்கள் சுகாதார தீங்குகளைத் தடுப்பதற்கான நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கொன்றை அல்லது தீங்குகளை பரிசோதிப்பதற்காக வரும் உரிய அதிகாரி அல்லது உரிய அதிகாரியின் பிரதிநிதியொருவர் தாம் வந்ததாக மற்றும் மக்கள் சுகாதார தீங்குகளைப் பரிசோதித்ததாகக் குறிப்பதற்கு “மக்கள் சுகாதார தீங்குகளைத் தடுக்கும் இட அட்டை,, எனும் 1ஆம் உப அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் ஒரு அட்டை எல்லா வளவுகளிலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(2) குறிப்பிடப்பட்ட மக்கள் சுகாதார தீங்குகளை தடுக்கும் அட்டை வாக்காளர்பெயர் பட்டியல் மூலம் வழங்கப்பட்டுள்ள வீட்டு இலக்கத்தின் படி இலக்கமிடப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அவ்வாறு வீட்டு இலக்கம், வீட்டைப் பரிசோதிக்கும் சந்தர்ப்பமாகும் போது கிடைத்திருக்காவிட்டால் தற்காலிக இலக்கமொன்றின் கீழ் அவ்வட்டை வழங்கப்படுதல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட அவ்வட்டையினைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் உரிய அதிகாரி அல்லது உரிய அதிகாரியின் பிரதிநிதியொருவருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் கேட்டபோது சமர்ப்பித்தல் மற்றும் அவ்வட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்காக அவ்விடத்தின் உரிமையாளர் வதிவினர் அல்லது பொறுப்பாளர் பொறுப்புடையவராவார்.

(4) அவ்வட்டையினைத் தொலைத்தல், உருமாற்றுதல் அல்லது அழித்தல் செய்யப்படக் கூடாதென்பதுடன் அவ்வாறு செய்யும் ஒவ்வொரு உரிமையாளர்/வதிப்பவர்கள் அல்லது பொறுப்பாளர் தொடர்பாக சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இந்நியதிச் சட்டத்தின் 5ம் பிரிவின் (1) ஆ ம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறி ஏதும் இடம் ஒன்றில் உள்ள திறக்கப்பட்டபேணிகள், போத்தல்கள், பெட்டிகள், தேங்காய் மட்டைகள், செவ்விள நீர் மட்டைகள், டயர்கள் அல்லது வேறு ஏதும் பொருள் அல்லது பொருட்களில் நீர் நிரம்பி நுளம்பு முட்டைகள் அல்லது எச்சங்கள் இருப்பதாக உரிய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி கண்டுப்பிடித்த போது நியதிச் சட்டத்தின் 6(1) ஆம் உபவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்விடத்தின் உரிமையாளருக்கு வதிபவருக்கு அல்லது பொறுப்பாளருக்கு அவரது விருப்பப்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் விதிக்கப்படும் அதேவிடத்தில் தண்டனைப் பணம் குறிப்பிடப்பட்ட தண்டப் பத்திரத்தின்மாதிரி 2ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் படியாக இருத்தல் வேண்டும். அம்மாதிரி 3 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன் முதற்பிரதியும், இரண்டாம் பிரதியும் தவறுக்குப் பொறுப்பான நபருக்கு வழங்கப்படுதல் வேண்டும். மூன்றாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டியதுடன் தவறுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பான தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக இதன் இரண்டாம் பிரதியைத்தொடர்பானபிரதேசச் செயலாளர் அலுவலகத்துக்குச் சமர்பித்தல் வேண்டும்.

5. இந்நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மீறும் வகையில் தவறொன்று வெளியாகிய சந்தர்ப்பமொன்றில் உரிய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் இந்நியதிச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் கீழ் ஏதும் இடமொன்றின் உரிமையாளர்/வதிவாளர் அல்லது பொறுப்பாளர் இடம் வழங்கவேண்டிய அறிவித்தலின் மாதிரி 3ம் உப அட்டவணையில் விதிக்கப்பட்டுள்ள மாதிரியின்படி இருத்தல் வேண்டும். அம்மாதிரி 2 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன் முதற்பிரதி தவறுக்குப் பொறுப்பு கூறவேண்டியவருக்கு வழங்குதல் வேண்டும். இரண்டாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

6. இந்நியதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை மீறும் தவறொன்றுவெளியான சந்தர்ப்பமொன்றில் உரிய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இந்நியதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் ஏதும் இடமொன்றின் உரிமையாளர்/வதிவாளர் அல்லது பொறுப்பாளர் இடம் வழங்கவேண்டிய அறிவித்தல் படிவத்தின் மாதிரி 4ம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட படியான படிவத்தின் பிரகாரம் இருத்தல் வேண்டும். அம்மாதிரி 2 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன் முதற்பிரதி தவறுக்குப் பொறுப்பானவருக்கு வழங்குதல் வேண்டும். இரண்டாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

7. இந்நியதிச் சட்டத்தின் 6 (1) உப பந்தியில் குறிப்பிடப்பட்ட இடத்தில் உடனடித் தண்டப் பணம் ரூபா. 2000 ஆக இருத்தல் வேண்டும். இத்தொகை காலத்தின் தேவைபாடுகளுக்கேற்பத் திருத்தப்படலாம்.

8. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்று தொடர்பாகக் குற்றவாளியாக்கப்பட்டு நீதிமன்றத்தினால் அத்தவறு தொடர்பாக விதிக்கப்படும் ஏதும் தண்டம் தொடர்பாக அறவிடப்படும் தண்டப் பணத்திலிருந்து 25% க்குமேற்படாத தொகை பணம் அக்குற்றவாளியாக ஆக்குவதற்குக் காரணமாக இருந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்கபடலாம்.

(2) இந்நியதிச் சட்டத்தின் 6 ம் பிரிவின் 1 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஸ்தலத் தண்டப்பணத்தின் 10% பணம் அவ்வாறு குற்றவாளியாக்குவதற்குக் காரணமாக இருந்த அலுவலருக்கு கொடுக்கப்படலாம்.

(3) ஸ்தலத் தண்டப்பணத்தின் காரணமாக இருந்த அலுவலருக்கு செலுத்தப்படும் வெகுமதிப் பணம் குறிப்பிட்ட இடம் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகம் மூலம் தொடர்பான அலுவலருக்குக் கொடுக்கப்படும்.

*9. (1) இந்நியதிச் சட்டத்தின் 4 ஆம் மற்றும் 7 ஆம் உப பிரிவுகளின் கீழ் எழுத்துருவிலான அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ள ஏதும் இடமொன்றின் உரிமையாளர், வதிவாளர், பொறுப்பாளர் 14 (1) உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் நிறுவனமொன்றின் அதிகாரியொருவருக்கு விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கமையச் செயற்படுதலைத் தவற விடும்போது ஏதும் இடமொன்றின் பொது சுகாதார தீங்குகளை அகற்றுதல் வேண்டும் என 9ம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் பிரகாரம் உரிய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தீர்மானித்ததன் பின்னர் அத்தீங்கினை அகற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்வதற்காக எவரேனும் நபர் ஒருவருக்கு ஏதும் நிறுவனமொன்றுக்கு அல்லது கம்பெனிக்குப் பொறுப்பளிக்க முடியும்.*

*(2) ஏதும் இடமொன்றின் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கை அல்லது பணி வழங்கப்பட்ட நபர் ஒருவருக்கு நிறுவனமொன்றுக்கு அல்லது கம்பெனியொன்றுக்கு அக்குறிப்பிடப்பட்ட பொதுத் தீங்குகளை அகற்றுவதற்காக வழங்கவேண்டிய கட்டணம், 5 ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டண அளவாக இருத்தல் வேண்டும். அக்கட்டணங்கள் சந்தைப் பெறுமானத்திற்கேற்ப உரிய அதிகாரியினால் காலத்துக்கு காலம் திருத்தப்படலாம்.*

*(3) ஏதும் இடமொன்றின் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கை அல்லது பணி வழங்கப்பட்ட நபர் நிறுவனம் அல்லது கம்பெனியினால் குறிப்பிட்ட அந்தபொது தீங்குகளை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பணம் நிறைவேற்றப்பட்ட பணி அல்லது நடவடிக்கை பற்றி உரிய மதிப்பீட்டின் பின்னர் உரிய அதிகாரியினால் அந்நபருக்கு நிறுவனத்துக்கு அல்லது கம்பெனிக்குச் செலுத்துதல் வேண்டும்.*

*(4) ஏதும் இடமொன்றில் அடையாளங் காணப்பட்ட பொதுச் சுகாதார தீங்குகளை அகற்றுவதற்காகஉரிய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட பணத்தை அவ்விடத்தின் உரிமையாளர்/வதிவாளர் அல்லது பொறுப்பாளரினால் உரிய அதிகாரிக்குச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்த வேண்டிய கட்டணத்தைக் குறித்து உரிய அதிகாரி அல்லது உரிய அதிகாரியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தயாரிக்கப்படும் சான்றிதழின் மாதிரி 6ம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் படி இருத்தல் வேண்டும். அம்மாதிரி பொதுச் சுகாதார தீங்குகளை அகற்றுவதற்குக் காரணமாக இருந்த அலுவலரினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.*

*10. நியதிச் சட்டத்தின் 9(2) உப விதியின் கீழ் செலுத்துவதற்கு விதிக்கப்பட்டதொகை பற்றிய விவரம் 9 (3) உப பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் படுவதற்காக உரிய அதிகாரியினால் சான்றிதழின் மாதிரி 7ம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் இருத்தல் வேண்டும்.*

*1 ஆம் பக்கம*

*பொதுச் சுகாதாரத் தீங்குளை நீக்குவோம்*

*உரிமையாளர்/வதிவாளர்/பொறுப்பாளர் பெயர்:-*

*வீட்டு இலக்கம் :-*

*முகவரி :-*

*மாவட்டம் :-*

*பிரதேச செயலாளர் பிரிவு :-*

*பொதுச் சுகாதார அலுவலர் பிரிவு :-*




**மேல் மாகாண சுகாதார திணைக்களம்**

***4 ஆம் பக்கம்***

**பொதுச் சுகாதாரத் தீங்குகள்**

1. பகிரங்கத் தண்ணீர் ஓட்டமொன்றுக்கு அசுத்த நீரை விடுதல்.

2. குப்பைகளைப் பாதைக்கு அல்லது வடிகாலினுள் போடுதல், அல்லது நன்கு மூடப்படாத குப்பைத் தொட்டிகளைப் பொது இடங்களில் வைத்தல்.

3. பாதை ஒழுங்கை, அடிப்பாதை என்பன அழுக்காகும் விதத்தில் வாகனங்களைக் கழுவுதல்.

4. பிரவேசப் பாதையொன்றில் அல்லது பொது இடங்களில் மிருகங்களுக்கு மலங்கழிக்க இடமளித்தல்.

5. ஏதும் வளவொன்றை அசுத்தமாக வைத்திருத்தல், மலகூட அல்லது அசுத்த நீரை வெளியிற் செல்ல இடமளித்தல் மற்றும் அழுக்காகி நீர் இருப்பதற்கு இடமளித்தல்.

6. வெறுக்கப்படும் துர்வாடை வீசும் வடிகால்களை இருப்பதற்கு இடமளித்தல்.

7. கால்நடைகளை, ஆடுகளை மற்றும் பன்றிகளை மக்களிற்கு தீங்குகள் ஏற்படும் விதத்தில் வைத்துக் கொள்ளுதல்.

8. கட்டிடமொன்றை, மதிலொன்றை உடைந்து விழும் நிலையில் வைத்திருத்தல்.

9. மக்களுக்குத் தீங்குகள் ஏற்படக் கூடிய விதத்தில் தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல்.

10. சுகாதாரத் தடை ஏற்படும் விதத்தில் ஏதும் ஒரு பொருளை வைத்திருத்தல்.

11. மக்களுக்குத் தீங்குகள் ஏற்படக்கூடிய விதத்தில் வானொலி இயந்திரம் அல்லது வேறு ஊடகம் மூலமாக ஒலியை வெளியேற்றுதல்.

12. பிரதானபாதை அல்லது வடிகால்கள் தடையாகக் கூடிய விதத்தில் பொருட்கள் அல்லது ஏதும் பொருள் ஒன்றை அல்லது அனுமதியளிக்கப்படாத கட்டிடமொன்றை கட்டுதல்.

13. வீட்டினுள் அல்லது வெளியில் நுளம்புகள் பெருகுவதற்குத் தோதான விதத்தில் டின்கள், போத்தல்கள், சிரட்டைகள், தேங்காய் மட்டைகள், டயர்கள், மழைப் பீலிகள், தண்ணீர் தாங்கிகள், செயற்கைப் பொய்கைகள், கொங்ரீட் தட்டச்சு, எறும்பு புற்றுகள், சட்டி முட்டிகள், குளிர்சாதன தட்டுக்கள் அல்லது ஏதும் பின்னணியொன்றை நடாத்திச் செல்லுதல்.

**குறிப்பு** : இந்த அட்டை ஓர் அரசப் பதிவேடு என்பதுடன் அதனைத் தொலைத்தல் உருமாற்றுதல், அழித்தல் போன்றன தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

**மேல் மாகாணசுகாதார திணைக்களம்**

***1 ஆம் அட்டவணை***

மே மா
சுகாதாரம் 1.

**2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் பொதுச் சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டம்**

பொதுச் சுகாதாரத் தீங்குகளைப் பரிசோதித்தமை பற்றிய அட்டை

| திகதி | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் / பிரதிநிதியின்பெயர் | அலுவலக முகவரி | கண்டுபிடிக்கப்பட்ட மக்கள் சுகாதாரத் தீங்கு/தீங்குகள் | பரிசீலனையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

***2 ஆம் அட்டவணை***

மே மா
சுகாதாரம் 2.

***2012 ம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொதுச் சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டம்***

*மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேல் மாகாணம்*

*2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண சபையின் மக்கள் சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றச்சாட்டுளைச் சமர்ப்பிப்பதற்கு பதிலாக இடத்திலேயே தண்டமொன்றை விதித்தல்'*

தவறு கண்டுபிடிக்கப்பட்ட திகதி :....................................................................
குறிப்பிட்ட இடம் :....................................................................
தவறின் தன்மை :....................................................................
தவறுக்குப் பொறுப்பானவரின் பெயர் :....................................................................
வதியும் முகவரி :....................................................................
செலுத்த வேண்டிய கட்டணத் தொகை :....................................................................

மேற்குறிப்பிட்ட தவறின் தன்மையினை நான்/நாம் ஏற்கின்றோம் என்றும், அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தண்டப் பணத்தை இவ்வறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் ............. பிரதேச செயலாளர் அலுவலகத்துக்குச் செலுத்தி அது தொடர்பான பற்றுச்சீட்டை ................... சுகாதார வைத்திய அலுவலர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதாகவும் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கின்றோம்.

திகதி :............................

....................................................................
தவறுக்குப் பொறுப்பானவரின் கையொப்பம்

தண்டப் பணம் செலுத்துதல் இவ்வறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் செய்யப்படா விட்டால் அல்லது தவற விட்டால் மீண்டும் அறிவிக்கப்படாமல் வழக்குத் தொடருவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

..........................................................
அதிகாரம் பெற்ற அலுவலர்

சாட்சி :............................................
பெயர் :...........................................
அலுவலக முகவரி :....................................

திகதி :.................................................

கவனிக்க வேண்டியது இப்படிவம் 3 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன், முதற்பிரதியும், இரண்டாம் பிரதியும் தவறுக்குப் பொறுப்பு கூறவேண்டியவருக்கு வழங்கப்பட வேண்டியதுடன், மூன்றாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் பொறுப்பில் வைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும், தவறுக்குப்பொறுப்புக் கூறவேண்டியவர் தொடர்பான தண்டப் பணத்தைச் செலுத்துவதற்காக இதன் இரண்டாம் பிரதியைத் தொடர்பான பிரதேச செயலக அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

***3 ஆம் அட்டவணை***

மே. மா
சுகாதாரம் 3.

எனது இலக்கம் :..................................................................................................
(பெயர்) : ...........................................................................................................
பொதுச் சுகாதார பரிசோதகர்/சுகாதார வைத்திய அலுவலர் (களம்).............
(திகதி).......................................................................................................

(தவறிழைத்தவர் பெயர்) :..................................................................................
(தவறிழைத்தவர் முகவரி) :..............................................................................

*2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கப் பொது சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*
*(2 மற்றும் 4(1) ஆம் பிரிவுகளின் கீழ்)*

தங்களுக்குரிய/தாங்கள் வசிக்கும்/தங்களின் பொறுப்பில் உள்ள /தங்கள் தொழில் முயற்சி நடத்தப்படுகின்ற (தவறு செய்யப்பட்ட இடம்)...................................இடத்தினுள் (நடைபெற்ற தவறு)........................................ காரணமாக பொதுச் சுகாதாரத்துக்குத் தீங்கு ஏற்படுத்தும் நிலை இருப்பதாக ............................................... தினத்தன்று எனது பரிசீலனையின் போது தெரியவந்தது.

இலங்கைச் சனநாயகச் சோஷலிசக் குடியரசின்மேல் மாகாண மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள 2012ம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் மக்கள் சுகாதாரத்துக்குத் தீங்குகளைத் தடுக்கும் மற்றும் அகற்றுவதற்காக விதிக்கப்பட்டுள்ள பிரிவுகளின் 2ம் இலக்க ...................... பிரிவுக்கு/பிரிவுகளுக்கு ஏற்பத் தங்களால் ஒரு தவறு செய்யப்பட்டுள்ளதால் இவ்வறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து............................ நாட்களுக்குள் சரி செய்து தவறு செய்யப்பட்ட பிரிவின் சுகாதார வைத்திய அலுவலகம்/பொது சுகாதார பரிசோதகரிடம் அறிவிக்குமாறு பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவின் படி தங்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இவ்வறிவித்தலை புறக்கணித்தால்' வேறு எந்த அறிவித்தலுமின்றித் தங்களுக்கெதிராகச் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்படும் என்பதையும் தாங்கள் குற்றவாளியானால் ரூபா 3000 க்குக் குறையாத மற்றும் ரூபா 25000 க்கு மேலாகாத தண்டனைப் பணத்துக்கு அல்லது 06 மாதத்துக்கு மேலாகாத சிறைத் தண்டனைக்கு அல்லது தண்டனைகள் இரண்டுக்கும் உள்ளாவதற்கு நேரிடும் என்பதையும் மேலும் அறிவிக்கின்றேன்.

திருத்தற் கட்டளைகள் :-

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

.........................................
உரிய அதிகாரி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்,
மேற்குறிப்பிட்ட முகவரியில்........................................................................................ ஆகிய நான் மேல் மாகாண சுகாதார 3ம் இலக்க அறிவித்தல் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................
உரிமையாளர்/வதிவாளர்/பொறுப்பாளர்
(தேவையற்ற வசனங்களை வெட்டி விட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சுருக்க ஒப்பத்தையிடவும்).

**குறிப்பு**:- இப்படிவம் 2 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன் முதற்பிரதி தவறுக்குப் பொறுப்பானவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்' இரண்டாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

### 4 ஆம் அட்டவணை

மே. மா
சுகாதாரம் 4.

எனது இலக்கம் :..............................................................................................
(பெயர்) :......................................................................................................
பொதுச் சுகாதார பரிசோதகர்/ சுகாதார வைத்திய அலுவலர்
(களம்) .........................................................................................................
..................................................................................................................(திகதி).

(தவறிழைத்தவர் பெயர் ):...............................................................................................
(தவறிழைத்தவர் முகவரி) :..............................................................................................

**2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொதுச் சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**
(5 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் கீழ்)

தங்களுக்குரிய/ தாங்கள் வசிக்கும்/ தங்களின் பொறுப்பில் இருக்கும் / தங்கள் தொழில் முயற்சி நடத்தபடும் (தவறு செய்யப்பட்ட இடம்)....................................................... இடத்தினுள் (செய்யப்பட்ட தவறு) ............................................... காரணமாக நுளம்புகள் பெருகுவதற்குச் சாதகமான ஒரு நிலை நிலவுவதாக ...............................................த் திகதியன்று என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது.

இலங்கைச் சனநாயகச் சோஷலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாணச் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் நுளம்புகளிலிருந்து பரவும் நோய்களைத் தடுத்தல் மற்றும் அகற்றுவதற்காக விதிக்கப்பட்டுள்ள பிரிவுகளின் ...................................... பிரிவுக்கு/பிரிவுகளுக்கு ஏற்பத் தங்களால் தவறொன்று செய்யப்பட்டுள்ளதால், அத்தவறை இவ்வறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து ....................................... நாட்களுக்குள்சரி செய்து தவறு செய்யப்பட்ட பிரிவின் சுகாதார வைத்திய அதிகாரி/ பொது சுகாதார பரிசோதகரிடம் அறிவிக்குமாறு பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் படி தங்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இவ்வறிவித்தலைப் புறக்கணித்தால், வேறு எந்த அறிவித்தலுமின்றித் தங்களுக்கெதிராகச் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்படும் என்பதையும் தாங்கள் குற்றவாளியானால் ரூபா 3000, க்குக் குறையாத மற்றும் ரூபா 25000, - க்கு மேலாகாத தண்டனைப் பணத்துக்கு அல்லது 06 மாதத்துக்குமேலாகாத சிறைத் தண்டனைக்கு அல்லது தண்டனைகள் இரண்டுக்கும் உள்ளாவதற்கு நேரிடும் என்பதையும் மேலும் அறிவிக்கின்றேன்'

சரி செய்யும் கட்டளைகள்:-

..........................................................................................................................................................................................................................

..........................................................................................................................................................................................................................

..............................................................
உரிய அதிகாரி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்,
மேற்குறிப்பிட்ட முகவரியில் ..................................................................... ஆகிய நான் மேல் மாகாண சுகாதார 3ம் இலக்க அறிவித்தல் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................
உரிமையாளர், வதிவாளர், பொறுப்பாளர்
(தேவையற்ற வசனங்களை வெட்டி விட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சுருக்க ஒப்பத்தையிடவும்)

**குறிப்பு** :- இப்படிவம் 2 பிரதிகளாக நிரப்பப்பட வேண்டியதுடன், முதற்பிரதி தவறுக்குப் பொறுப்பானவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். இரண்டாம் பிரதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

**5 ஆம் அட்டவணை**

நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பான பொருட்களை அகற்றுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக இடத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரினால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்.

| | செய்யப்பட வேண்டிய பணி/பணிகள் | அலகின் அளவு | குறைந்த கட்டணம் ரூபா | ஆகக்கூடிய கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | | கை இழுவை வண்டி 1/2 அளவு வரை. | 1>000 | 5>0000 |
| | | கை இழுவை வண்டி 1/2 இல் இருந்து கை இழுவை வண்டி 1 வரையான அளவு | 2>000 | 1>0000 |
| | | 1 இழுவை வண்டி அல்லது அதற்கு மேல் | 5,000 | 25,000 |

| | செய்யப்பட வேண்டிய பணி/ பணிகள் | அலகின் அளவு | குறைந்த கட்டணம் ரூபா | ஆகக்கூடிய கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 2 | நுளம்புகள் பெறுகுவதற்கு வாய்ப்பான ஏதும் இட மொன்றில் சேரும் நீரை அவ்வாறு சேராமல் சரி செய்தல் | ஒரு பேர்ச்சஸ் அளவுக்காக | 2,500 | 25,000 |
| 3 | தண்ணீர் இறங்கிச் செல்வதற்கு இடையூறாக உள்ள வடி கால், குழி, வாய்க்கால் வழியினை நீர் வழிந்தோடச் சரி செய்தல். | 1 மீற்றர் தூரத்திற்கு | 1,000 | 25,000 |
| 4 (அ) | நீர் நிரம்பியுள்ள பாவனைக்கெடுக்காத கிணறு, பொய்கை. தாங்கி, நீர் நிரம்பிய குழி, மலசலகூட குழியை மூடி விடுதல். | ஒரு கியூபிக் மீற்றர் | 1,000 | அளவின்படி |
| 4 (ஆ) | தாங்கி போன்ற ஒன்றை உடைத்து அகற்றுதல் | கை இழுவை வண்டி 1/2 அளவு வரை | 2,500 | 7,500 |
| | | கை இழுவை வண்டி 1/2 இல் இருந்து கை இழுவை வண்டி 1 வரையான அளவு | 5,000 | 15,000 |
| | | 1 இழுவை வண்டி அல்லது அதற்கு மேல் | 10,000 | 20,000 |

***6 ஆம் அட்டவணை***

மே .மா.
சுகாதாரம் 5.

எனது இலக்கம் :.............................................................................
அலுவலகம் :..................................................................................
முகவரி :........................................................................................
........................................................................................ (திகதி)

(தவறிழைத்தவர் பெயர்) :..................................................................................................
(தவறிழைத்தவர் முகவரி) :................................................................................................

**2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பொது சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச் சட்டத்தின் கீழ் 9ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அதிகாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காக வழங்கப்படும் செலவுச் சான்றிதழ்**

2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் 4 அல்லது 7ம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையினைத் தாங்கள் புறக்கணித்துள்ளமையினால்' அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களும், உரிய அதிகாரியினால் நியமித்துக் கொள்ளப்பட்ட......................................... (நிறுவனத்தின் அல்லது கம்பெனியின் பெயர்) மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்விடயங்ளையும் நடவடிக்கைளையும் நிறைவேற்றுவதில் செலவிடப்பட்ட கீழ் குறிக்கப்பட்ட பணத்தை 14 நாட்களுக்குள் ............................................ பிரதேச செயலாளரிடம் செலுத்துமாறும் அவ்வாறு செலுத்தியதன் பின்னர் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சுகாதார வைத்திய அதிகாரி ....................................... க்கு (சுகாதார வைத்திய அலுவலர் பிரிவு) சமர்ப்பிக்குமாறு அறிவிக்கின்றேன். மேலும் அவ்வாறு குறிப்பிடப்பட்ட அச்செலவு புறக்கணிக்கப்படுமெனின் 9(3) ஆம் உப பிரிவின் கீழ் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடருவது மூலம் அப்பணமும் மற்றும் அப்பணத்தின் 50% மேலதிக தண்டமும் அறவிடப்படுவதற்கு நேரிடும் என்பதை அறிவிக்கின்றேன்.

| நிறைவேற்றப்பட்ட கருமம் | அலகுகளின் எண்ணிக்கை | கட்டணம் | தண்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

.....................................................................
*உரிய அதிகாரி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.*

***7 ஆம் அட்டவணை***

*மே. மா*
*சுகாதாரம் 6*

*நீதவான் அவர்கள்,*
*நீதவான் நீதிமன்றம்,*
..........................................

***2012 ம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது சுகாதாரத் தீங்குகளைத் தவிர்ப்பதற்கான நியதிச் சட்டத்தின் கீழ் உரிய அதிகாரி/ அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி குறிப்பிடப்பட்ட பொதுத் தீங்கினை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுக்காக வசிப்பவர்/உரிமையாளர்/ பொறுப்பாளரினால்*** *செலுத்தப்பட வேண்டிய பணம் பற்றிய சான்றிதழ்*

*2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது சுகாதாரத் தீங்குகளைத் தடுக்கும் நியதிச் சட்டத்தின் 4 அல்லது 7 ஆம் பிரிவின் கீழ் உரிய அதிகாரி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரான ........................... ஆகிய என்னால் 20 .... ஆம் ஆண்டு................... மாதம்.......................... திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை காரணமாக 9 (2)ஆம் உப பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பணத்தொகை மற்றும் தண்டப்பணம் பற்றிய செலவு விபரத்தைக் கீழே குறிப்பிடுகின்றேன்.*

| நிறைவேற்றப்பட்ட கருமம் | அலகுகளின் எண்ணிக்கை | கட்டணம் | தண்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

*திகதி :.............................*

...................................................................
*உரிய அதிகாரி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.*

*மேற்குறிப்பிட்ட செலவுச் சான்றிதழை 20..... ஆம் ஆண்டு ........................... மாதம்........................ ஆந் திகதியன்று பெற்றுக்கொண்டேன்.*

.......................................................
*உரிமையாளர்/வசிப்பவர்/பொறுப்பாளர்.*

*8- 882*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.